தினகரன் 01/12/17

# டிஎன்பிஎல் சார்பில் நலத்திட்ட உதவிகள்



டிஎன்பிஎல் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

க.பரமத்தி, டிச.1: டிஎன்பிஎல் காகித ஆலை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

டிஎன்பிஎல் காகித ஆலை சமுதாயப் நலப்பணி திட்டத்தின் கீழ் ஆலையை சுற்றியுள்ள மறவாபாளையம், மூலிமங்கலம், ஏமூர், மோகனூர், கொளாநல்லி, மேதிநகர் மண்மங்கலம், ஜல்லிபட்டி, பெரிய வள்ளி பாளையம், குப்பம், புத்தாம்பூர், நாணப்பரப்பு, அத்திப்பாளையம் மற்றும் நஞ்சை புகழூர் பகுதி கோயில்களுக்கு புனரமைப்பு பணி, கும்பாபிஷேகம் மற்றும் ஆராதனை போன்றவற்றுக்கு ரூ.1லட்சத்து 70 ஆயிரம் வழங்கப்பட்டது.

மேலும் சென்னையில் உள்ள ஒரு அமைப்பின் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகையும் வழங்கப்பட்டது. இதற்கான விழாவிற்கு காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) வெங்கடராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். பொதுமேலாளர்கள் பாலசுப்பிரமணியன், லோகநாதன், தங்கராசு ஆகியோர் கலந்துகொண்டனர்.